# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 2467/67 - 2025 දෙසැම්බර් මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.12.18

*2467/67 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**22 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

1. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) 22 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகிய அனுர குமார திசாநாயக்க ஆகிய நான், இக்கட்டளையின் மூலம்,

   i. 2021, பெப்புருவரி 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பகுதி I இல் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் நியதிகளுக்கமைய, ஆரம்ப புலம்பெயர் கொடுப்பனவின் கீழ் புலம்பெயர்ந்த ஒருவரின் மூலம் மேற்கொள்ளப்படும் வெளிமுகப் பணவலுப்பல்களை ஐ.அ. டொலர் 100,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகிறேன்.

   ii. 2021, பெப்புருவரி 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஒழுங்குவிதிகளுக்கான (இதனகத்துப் பின்னர் "2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஒழுங்குவிதிகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அட்டவணையின் பகுதி 1 இல் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் நியதிகளுக்கமைய இலங்கையில் வதிகின்ற ஆளொருவர் மூலம் வெளிநாடுகளில் முதலீடுகளை மேற்கொள்கின்ற நோக்கத்திற்காக பின்வருவன நீங்கலாக, வெளிமுக முதலீட்டுக் கணக்கு ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இடைநிறுத்துகிறேன் :

(அ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிகளின் (முதலீட்னைப் பெறுபவர்) சாதாரண பங்குகளில் பின்வரும் தகைமையுடைய முதலீட்டாளர்களினால் செய்யப்பட்ட முதலீடுகள் :

i. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகள், ஐ.அ. டொலர் 750,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை, அல்லது பிந்திய நிதியியல் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளுக்கமைவாக முதலீட்டாளர் கம்பனியின் தேறிய சொத்துக்களின் 20 சதவீதத்திற்கு குறைவான அல்லது சமான தொகை, இதில் எது குறைவானதோ அது,

ii. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அத்துடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப் படாத கம்பனிகள், ஐ.அ. டொலர் 200,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை, அல்லது பிந்திய நிதியியல் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளுக்கமைவாக முதலீட்டாளர் கம்பனியின் தேறிய சொத்துக்களின் 20 சதவீதத்திற்கு குறைவான அல்லது சமான தொகை, இதில் எது குறைவானதோ அது,

(ஆ) இலங்கைக்கு வெளியிலுள்ள கம்பனியொன்றின் (முதலீடுகளைப் பெறுபவர்) சாதாரண பங்குகளில் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும் முதலீடு ஆயின், அத்தகைய முதலீடானது, இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்து முதலீட்டுக் கமபனி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுக் கடனொன்றினூடாக ஒட்டுமொத்தமாக நிதியளிக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது

(இ) இலங்கைக்கு வெளியிலுள்ள கம்பனியொன்றின் (முதலீட்டினைப் பெறுபவர்) சாதாரண பங்குகளில் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும் முதலீடு ஆயின், அத்தகைய முதலீடுகள் முதலீட்டாளரினால் வழங்கப்பட்ட குறைந்த பட்சம் ஏழு வருட காலப்பகுதியுடனும் பங்குகளுடனும் கூடிய படுகடன் பிணையங்களில் இலங்கைக்கு வெளியில் வதியும் ஆளொருவரினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் பெறுகைகளினூடாக ஒட்டுமொத்தமாக நிதியளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆயின், மேலே (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள முதலீடுகள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாயிருத்தல் வேண்டும்.

(அ) முதலீடுகளின் நோக்கம் கீழேயுள்ள பந்தி 2.i இல் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளவாறு வெளிநாடுகளிலுள்ள வியாபாரங்களை விரிவாக்குவதற்கானதாவிருத்தல் வேண்டும்.

(ஆ) முதலீடுகள் கீழேயுள்ள பந்தி 2.ii இல் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு சொத்துப்பட்டியல் முதலீடுகளை உள்ளடக்காதிருத்தல் வேண்டும்.

(இ) முதலீட்டினைப் பெறுகின்றவர் அதன் முதன்மை வியாபார நடவடிக்கைகளாக முதலீடுகளில் ஈடுபடுகின்ற ஒரு கம்பனியாக இருத்தலாகாது.

(ஈ) முதலீட்டாளர், முதலீடுகள் மேலேயுள்ள பந்திகள் அ, ஆ மற்றும் இ இல் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை வெளிமுக முதலீட்டாளர் கணக்குகள் வாயிலாக எந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகரூடாக வெளிமுக பணவனுப்பல்கள் செய்யப்படவுள்ளதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அத்தகைய கம்பனியின் பணிப்பாளர் சபையின் மூலம் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின் மூலம் உறுதிசெய்தல் வேண்டும்.

(ஈ) சட்டத்தினது ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க அந்நாட்டின் துணைநிறுவனமொன்றில் அல்லது வெளிநாட்டு அலுவலகமொன்றில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மீது ஏற்புடைய முதலீட்டினைப் பெறுகின்றவரின் நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு தகைமையுடைய வதியும் முதலீட்டாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்படும் தொடர்ந்து வருகின்ற முதலீடுகள், அல்லது

(உ) வெளிநாட்டு அலுவலகங்களை நிறுவுவதற்கு ஐ. அ. டொலர் 100,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் அல்லது

(ஊ) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க கட்டளையின் செயலுறு திகதிக்கு முன்னர் தாபிக்கப்பட்ட, வெளிநாட்டு அலுவலகங்களில் ஐ. அ. டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும் முதலீடுகள், அல்லது

(எ) வங்கித்தொழில் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக வெளிநாடுகளிலுள்ள துணை நிறுவனங்களின் அத்துடன்/அல்லது வெளிநாட்டு அலுவலகங்களின் பங்குகளில் உரிமம்பெற்ற வங்கி யொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும் முதலீடுகள்

(ஏ) தகைமையுடைய வதிகின்ற தனிப்பட்டவர்களின் மூலம் ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்தில் அல்லது ஊழியர் பங்குத் தெரிவுத் திட்டங்களில் முதலீடுகள்.

iii. கீழேயுள்ள 2.i இல் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளவாறு வெளிநாடுகளில் தொழில் விரிவுபடுத்தல் நோக்கத்திற்காக இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வைத்திருக்கப்படுகின்ற தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் ஊடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களை உயர்ந்தபட்சம் ஐ. அ. டொலர் 500,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

iv. இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வைத்திருக்கப்படுகின்ற தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் ஊடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களை உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 25,000 வரை அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

v. 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுகின்ற முதலீடுகள் விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (10) ஆம் உப பிரிவின் நியதிகளின் பிரகாரம் அனுமதி வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் பரிசீலனையில் கொள்ளப்படலாம், ஆயின் அத்தகைய முதலீடுகள் பின்வரும் பிரமாணத்தினை நிறைவுசெய்தல் வேண்டும்.

(அ) முன்மொழியப்பட்ட முதலீடானது இலங்கைக்கு வெளியே உள்ள கம்பனியொன்றின் சாதாரண பங்குகளில் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஆயின், அத்தகைய முதலீடுகள் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளர் கம்பனியொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனொன்றினூடாக ஒட்டுமொத்தமாக நிதியளிக்கப்பட்டதாகவும் மேலேயுள்ள துணைப்பந்தி (ii) இன் கீழ் அ, ஆ, இ மற்றும் ஈ இல் தரப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதாகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) முன்மொழியப்பட்ட முதலீடானது இலங்கைக்கு வெளியே உள்ள கம்பனியொன்றின் சாதாரண பங்குகளில் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஆயின், இலங்கைக்கு வெளியில் வதியும் ஆளொருவரினால் குறைந்தது ஏழு வருட காலத்திலும் மற்றும் முதலீட்டாளரினால் வழங்கப்பட்ட பங்குகளுடனும் படுகடன் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் பெறுகைகளினூடாக ஒட்டுமொத்தமாக நிதியளிக்கப்பட்டதாகவும் மேலேயுள்ள துணைப்பந்தி (ii) இன் கீழ் அ, ஆ, இ மற்றும் ஈ இல் தரப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) முன்மொழியப்பட்ட முதலீடு சட்டத்தின் ஏற்பாடுகளுடனும் அதன்கீழ் விடுகக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுடனும் இணங்கி துணை நிறுவனமொன்றில் அல்லது வெளிநாட்டு அலுவலகமொன்றில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் மீது ஏற்புடைய முதலீட்டினைப் பெறுகின்றவரின் நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்குத் தகைமையுடைய வதிகின்ற முதலீட்டாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஈ) முன்மொழியப்பட்ட முதலீடானது வங்கித்தொழில் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற நோக்கங்களுக்காக உரிமம்பெற்ற வங்கியொன்றினால் வெளிநாட்டிலுள்ள துணை நிறுவனங்களில் அத்துடன்/ அல்லது முதலீட்டு அலுவலகங்களில் செய்யப்படுதல்.

2. இக்கட்டளையின் நோக்கங்களுக்காக,

i. “தொழில் விரிவுபடுத்தல்” என்பதன் பொருள், ஒன்றில் :

(அ) ஏற்கனவே காணப்படுகின்ற உற்பத்தி பிரிவுடன் அல்லது சேவைப் படைப்புகளுடன் நேரடியாகத் தொடர்புடைய செயற்பாடுகளை விரிவுபடுத்தல் தயாரித்தல்/ சேவை இயலளவை அதிகரித்தல் அல்லது ஏற்கனவே காணப் படுகின்ற தயாரிப்புகளின் அல்லது சேவைப்படைப்புகளின் பிரிவினுள் வழங்கப்படும் உற்பத்திகளின் அல்லது சேவைகளின் வீச்சினை விரிவுபடுத்தல் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது. அத்துடன்/ அல்லது

(ஆ) விநியோகச் சங்கிலியூடாக நடவடிக்கைகளை நிலைக்குத்தாக ஒருங்கிணைத்தல். இது ஒன்றில்

i. ஏற்கனவே காணப்படுகின்ற உற்பத்திப் பிரிவில் அல்லது சேவை வழங்கல்களில் பயன்படுத்தப்படுகின்ற மூலப்பொருட்களை அல்லது கூறுகளைப் பெற்றுக்கொள்வதுடன் நேரடியாகத் தொடர்புடையதாகக் காணப்படுகன்ற பின்நோக்கிய ஒருங்கிணைத்தலை அத்துடன்/ அல்லது

ii இறுதி வாடிக்கையாளருக்கு அண்மித்து நிறுவனங்களை கையகப்படுத்துவதை அல்லது கட்டுப்படுத்துவதை தாபிப்பதை அமைகின்ற, களஞ்சியப்படுத்தல், சந்தைப்படுத்தல் மற்றும் ஏற்கனவே காணப்படுகின்ற உற்பத்திகளை அல்லது சேவைப் படைப்புகளின் சில்லறை விற்பனைகள் உள்ளடங்கலாக விநியோகத் துடன் நேரடியாகத் தொடர்புபட்ட நடவடிக்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள முன்னோக்கிய ஒருங்கிணைத்தலை

உள்ளடக்கலாம்.

ii. "சொத்துப்பட்டியல் முதலீடு" என்பது இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் வாக்களிக்கின்ற அதிகாரத்தின் 10 சதவீதத்திற்கு குறைவாக அத்தகைய முதலீட்டாளர்கள் உரித்துடைய தகைமையுடைய வதிகின்ற முதலீட்டாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் எனப் பொருள்படும்.

iii. "வெளிநாட்டு அலுவலகங்கள்" என்பது இலங்கைக்கு வெளியில் தாபிக்கப்பட்ட கிளை, ஒருங்கிணைப்பு, சந்தைப்படுத்தல், முகவராண்மை, கருத்திட்டம், பிரதிநிதி அல்லது வேறு அதனையொத்த அலுவலகங்கள் எனப் பொருள்படும்.

iv. "உரிமம்பெற்ற வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் சொற்பொருளுக்குள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கியெனப் பொருள்படும்.

3. 2025, யூன் 18 ஆந் திகதியிடப்பட்ட 2441/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட கட்டளையின் 1 ஆம் பந்தியின் (i), (ii), (iii) மற்றும் (iv) பந்திகளின் கீழ், ஏற்கனவே வெளிமுக பணவனுப்பல்களை மேற்கொண்ட எவரேனும் தகைமையுடைய வதியும் ஆள் இக்கட்டளையின் கீழ் வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொள்ளவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும் ஆயின், மேலே சொல்லப்பட்ட கட்டளை மற்றும் இக்கட்டளை ஆகிய இரண்டின்\ கீழும் அத்தகைய வெளிமுக பணவலுப்பல்களின் ஒன்றுசேர்ந்த தொகை இக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட உயர்ந்தபட்ச தொகையினை விஞ்சாதிருக்க வேண்டும்.

4. இக்கட்டளை 2025, திசெம்பர் 20 தொடக்கம் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்கு செல்லுபடியானதாகும்.

5. 2025, யூன் 18 ஆந் திகதியிடப்பட்ட 2441/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட கட்டளைமேலே 3 ஆம் பந்திக்குப் பங்கமின்றி இத்தால் நீக்கப்படுகின்றது.

**அனுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2025, திசெம்பர் 18.

EOG 12-0186

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது